# கௌரவ ஸ்கொட் மொரிஸன் பாராளுமன்ற உறுப்பினர்
## குடிவரவு மற்றும் எல்லைப் பாதுகாப்பு அமைச்சர்

**ஊடக அறிக்கை**

---

**18 நவம்பர் 2014, செவ்வாய்க்கிழமை**

**மீளக் குடியமர்த்தலில் மாற்றங்கள் ஆட்கடத்தல்காரர்களுக்கு மற்றொரு பேரிடி**

2014 ஜுலை முதலாம் திகதி அல்லது அதற்குப் பின்னர் இந்தோனேஷியாவில் UNHCR இல் தம்மைப் பதிவு செய்து கொண்டவர்கள் இனிமேலும் அவுஸ்திரேலியாவில் மீளக் குடியமர்த்த தகுதி அற்றவர்களாவர் என்று குடிவரவு மற்றும் எல்லைப் பாதுகாப்பு அமைச்சர் கௌரவ ஸ்கொட் மொரிஸன் இன்று தெரிவித்துள்ளார்.

இந்தப் பிராந்தியத்தில் ஆண்களையும், பெண்களையும், சிறுவர்களையும் ஆள் கடத்தல்காரர்களுக்கு விற்பனை செய்துவரும் நடவடிக்கையைத் தடுக்கும் வகையில், அரசாங்கம் மேற்கொண்டுள்ள வேலைத்திட்டத்தின் ஒரு அங்கமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மொரிஸன் அறிவித்துள்ளார்.

“2014 ஆம் ஆண்டின் கடந்த பத்து மாதங்களில், ஒன்பது மாதங்கள் அவுஸ்திரேலியாவுக்கு எந்தவிதமான வெற்றிகரமான ஆள் கடத்தலும் இடம்பெறாமல் முடிவடைந்துள்ளன. புகலிடம் கோருகின்றவர்களை சட்டவிரோதமாக இந்தோனேஷியாவுக்குள் பிரவேசிக்குமாறு ஆள் கடத்தல்காரர்கள் தொடர்ந்தும் தூண்டி வருகின்றனர் என்பதையும் நாம் நன்கு அறிவோம். அவுஸ்திரேலியாவுக்குள் மீளக்குடியேறுவதற்கான வாய்ப்பைக் கோரும் வகையிலேயே அவர்கள் இவ்வாறு தூண்டி வருகின்றனர்” என்று அமைச்சர் மொரிஸன் கூறினார்.

“தற்போதைய மாற்றங்கள் இந்தோனேஷியாவுக்குள் புகலிடம் கோரி பிரவேசிப்பவர்களின் நடமாட்டத்தைக் கணிசமாகக் குறைக்கும். மேலும், இது அவர்களை முதலாவது தஞ்சம் புகும் நாட்டில் மீளக்குடியேறும் வாய்ப்பை வேண்டுவதை ஊக்குவிக்கும்”

இந்தோனேஷியாவில் 2014 ஜுலை 01 ஆம் திகதிக்கு முன் UNHCR இல் பதிவு செய்யப்பட்ட சில அகதிகளை மீளக்குடியேற்றும் பணிகளை அவுஸ்திரேலியா தொடர்ந்தும் மேற்கொள்ளும். ஆனால், எவ்வாறேனும் பல இடங்கள் ஒதுக்கப்பட மாட்டா. இதன் அர்த்தம், அவுஸ்திரேலியாவில் குடியேற இந்தோனேஷியாவில் காத்திருக்க வேண்டிய காலம் மிக நீண்டதாக இருக்கும் என்பதேயாகும்.

தமக்கு மேலதிக சாதகங்கள் மிக்க குடியேற்ற இடங்களில் புகலிடம் கோரும் நோக்கில் இடைத்தங்கல் நாடுகளுக்கு சட்டவிரோதமாக பயணம் செய்வதை அவுஸ்திரேலியா ஆதரிக்காது என்றும் அமைச்சர் மொரிஸன் கூறினார்.

“அரசாங்கத்தின் கொள்கைப் பிரகாரம் இறைமைமிக்க எல்லைகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள், கடலில் உயிர்களை காப்பதோடு மட்டும் நிற்கவில்லை. அது, உலகில் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட அகதிகளுக்கு எமது மனிதாபிமானத் திட்டத்தின் மூலம் பல இடங்களில் அனுமதி அளிக்கப்படவும் வழியமைத்துள்ளது. மேலும் இந்த இடங்கள் இந்தத் திட்டத்தைப் பயன்படுத்தி, இடைத்தங்கல் நாடொன்றின் மூலம் மீள் குடியேற்றத்தைத் தூண்டுபவர்களால் வேண்டப்பட்டவையும் அல்ல என்பதும் இங்கு முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டும்”

2014 - 2015 வரை அவுஸ்திரேலியாவின் மனிதாபிமானத் திட்டம் 13,750 இடங்களை இதற்கென வழங்கும். இதில் 11,000 இடங்கள் கடல்கடந்த நாடுகளின் மக்களுக்காகவும், இவர்களில் பெரும்பாலும் அனைவருமே முதலாவது தஞ்சம் புகுந்த நாட்டில் உள்ளவர்களாகவும் இருப்பர்.

இந்த முடிவு குறித்து இந்தோனேஷிய அரசுக்கு விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. இந்தோனேஷியாவுக்குள் புகலிடம் கோரி பிரவேசிக்கும் ஆள் கடத்தல்காரர்களால் உருவாக்கப்படும் சுமைகளைக் குறைக்கும் வகையில் இந்தத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.